# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1687/28 - 2011 ජනවාරි මස 05 වැනි බදාදා - 2011.01.05

*1687/28 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 05 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டம்**

*2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டத்தின் 5ஆம், 9ஆம் மற்றும் 17ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய அச்சட்டத்தின் பிரிவு 204 இன் கீழ் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.*

*ரிசாட் பதியுதீன், பா.உ.*
*கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர்.*

*கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு,*
*கொழும்பு,*
*04 சனவரி 2011.*

**ஒழுங்குவிதிகள்**

*01.* இந்த ஒழுங்குவிதிகள் 2011 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க புலமைச் சொத்து ஒழுங்குவிதி என குறிப்பிடப்படலாம் என்பதுடன் 2011 ஜனவரி 04 திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

*02.* ஒரு ஒலிபரப்பு நிறுவனம் (இதனகத்துப் பின் "நிறுவனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒரு பாடலை அல்லது அதன் ஏதேனும் பொருளளவிலான ஒரு பகுதியை ஒலிபரப்புமிடத்து, அத்தகைய நிறுவனம், 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பாடலுக்கான பாடலாசிரியருக்கு, இசைக் கலைஞருக்கு அல்லது பாடகருக்கு கீழ்குறிப்பிடப்படும் குறைந்தபட்சக் கொடுப்பனவுகளை வழங்குதல் வேண்டும்.

(I) (அ) வானொலியில் பாடலொன்றை ஒருமுறை ஒலிபரப்புச் செய்தல் தொடர்பில் :-

| | | | ரூபா. ச. |
|---|---|---|---|
| (1) | பாடல்களுக்கு அல்லது அதன் ஏதேனும் பொருளளவிலான ஒரு பகுதிக்கு | - | 3.00 |
| (2) | இசையாக்கத்திற்கு அல்லது அதன் ஏதேனும் பொருளளவிலான ஒரு பகுதிக்கு | - | 3.00 |
| (3) | பாடலொன்றை அல்லது அதன் ஏதேனும் பொருளளவிலான ஒரு பகுதியை பாடுவதற்கு | - | 3.00 |

(ஆ) இசையாக்கத்தினை வானொலியில் ஒருமுறை ஒலிபரப்புச் செய்தல் தொடர்பில் :-

சொற்களற்ற ஏதேனும் இசையாக்கத்திற்கு அல்லது அதன் ஏதேனும் பொருளளவிலான ஒரு பகுதிக்கு — ரூபா. ச. - 3.00

(II) (அ) தொலைக்காட்சியில் பாடலொன்றை ஒருமுறை ஒளிபரப்புச் செய்தல் தொடர்பில் :

(1) பாடல்களுக்கு அல்லது அதன் ஏதேனும் பொருளளவிலான ஒரு பகுதிக்கு - 10.00
(2) இசையாக்கத்திற்கு அல்லது அதன் ஏதேனும் பொருளளவிலான ஒரு பகுதிக்கு - 10.00
(3) பாடலொன்றை அல்லது அதன் ஏதேனும் பொருளளவிலான ஒரு பகுதியை பாடுவதற்கு - 10.00

(ஆ) தொலைக்காட்சியில் இசையாக்கத்தினை ஒரு முறை ஒளிபரப்புச் செய்தல் தொடர்பில் :

சொற்களற்ற ஏதேனும் இசையாக்கம் ஒன்றுக்கு அல்லது அதன் பொருளளவிலான ஏதேனும் ஒரு பகுதிக்கு - ரூபா 10.00

(III) (i) தொலைக்காட்சியில் காட்சிகளுடன் இணைந்ததாக ஒரு பாடலை அல்லது அதன் ஏதேனும் பொருளளவிலான பகுதியை ஒளிபரப்புச் செய்வதாயின், அத்தகைய காட்சியின் தயாரிப்பாளருக்கு - ரூபா 10.00

(ii) தொலைக்காட்சியில், சொற்களற்ற, காட்சிகளுடன் இணைந்ததாக ஒரு இசையாக்கத்தினை அல்லது அதன் ஒரு பொருளளவிலான பகுதியினை ஒளிபரப்புச் செய்வதாயின், அத்தகைய காட்சியின் தயாரிப்பாளருக்கு - ரூபா 10.00

எனினும், இத்துடன் சம்பந்தப்படுகின்ற கலைஞர் தரப்பினருக்கு மேலும் சாதகமாக அமையும் வகையில், நிறுவனமும் சம்பந்தப்பட்ட தரப்பினரும் கொடுப்பனவுகளை வேறுபடுத்துவது தொடர்பில் ஏதேனும் உடன்படிக்கையினை மேற்கொள்வதற்கு எவ்வித தடையுமில்லை.

03. (அ) மேற்குறிப்பிடப்பட்ட இரண்டாவது வாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட கொடுப்பனவு, நிறுவனத்தினால்,

(1) கொடுப்பனவைப் பெற உரித்துடைய ஆளுக்கு நேரடியாக ; அல்லது
(2) அத்தகைய ஆள் உறுப்பினராகவுள்ள கூட்டமைப்புக்கு,

வழங்கப்படல் வேண்டும்.

(ஆ) கொடுப்பனவுக்கு உரித்தான ஆள் அல்லது கூட்டமைப்பு, கொடுப்பனவு யாருக்கு செலுத்தப்பட வேண்டும் என்பது குறித்து எழுத்தில் நிறுவனத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

04. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக, சந்தர்ப்பங்கள் தேவைப்படுத்தினாலன்றி, “ஒலிபரப்பு நிறுவனம்”, “கூட்டமைப்பு” மற்றும் “ஆக்கம்” ஆகிய சொற்களின் வரைவிலக்கணங்கள், 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதே கருத்தையே கொண்டிருத்தல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.